1995 மார்ச் 29]

தார்ச்சாலையாக இருக்கிறது. அதை அகலப்படுத்துவது என்றால், இருவழிச் சாலையாகத்தான் மாற்றவேண்டும். அந்தச் சாலை ஒருவழிப்பாதை கொண்ட தார்ச்சாலை என்று தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலையை இனிமேல் அகலப்படுத்தவேண்டும் என்றால், எப்படி அகலப்படுத்தவேண்டும். என்று நம்முடைய உறுப்பினர் நினைக்கிறார் என்று தெரியவில்லை. ஒருவழிப்பாதையை அகலப்படுத்த வேண்டும் என்றால், இருவழிப்பாதையாகத்தான் மாற்ற வேண்டும். ஆகவே, குறுகலான சாலை என்ற பேச்சுக்கே இடம் இல்லை. ஏற்கெனவே ஒருவழிப்பாதை கொண்ட தார்ச்சாலையாக இருக்கிறது. ஆகவே இதை மாற்றுவது என்றால், இருவழிச் சாலையாக மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கு அந்தச் சாலையிலே வாகனப் போக்குவரத்தினுடைய செறிவு இல்லை என்று நான் தெரிவித்தேன். ஆகவே செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, திரு. கே. பி. ராஜூ, இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

149—

கோயம்புத்தூரில் வர்த்தகப் பொருட்காட்சி அமைத்தல்

*14881—**திரு. கே.பி. ராஜூ :**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், விமான நிலையம் அருகில் வர்த்தகப் பொருட்காட்சி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

[1995 மார்ச 29

முற்பகல் 10-40

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டமானது வரலாற்றுச் சிறப்புமிக்க மாவட்டம் என்பதும் ஒரு வாளித் தண்ணீர் குடித்தாலும் மறு வாளித் தண்ணீருக்காக ஏங்கும் உலகத்தின் இரண்டாவது சுவைமிக்க நீராகக் கருதப்படும் சிறுவாணித் தண்ணீர் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல, தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று சொல்லப்படுகின்ற பஞ்சாலைகள் நிறைந்த மிகப் பெரிய பெருமைக்குரிய கொங்குமண்டலம் என்பதும், அவர் கொங்குமண்டலத்திலே வசித்து வருபவர் என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட மாவட்டத்திலே மிகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு வெளிநாட்டவர்கள் வந்து வியாபாரம் செய்வதற்காக என்னுடைய தொகுதியிலே அமைந்துள்ள அந்த விமான நிலையத்திலே இறங்கி அங்கிருந்து சென்று வணிகர் நகரம் என்ற புகழ்பெற்றிருக்கக்கூடிய திருப்பூர் நகரம் மற்றும் கோவை மாவட்டத்திலே அதிகமாக உற்பத்தி செய்கின்ற பி.எஸ்.ஜி. நிறுவனம், எல்.எம்.டபிள்யூ. போன்ற நிறுவனங்களில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் மாவட்டப் பெருமைகள் பூராவும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே, கேள்வியாகக் கேளுங்கள். கோயம்புத்தூர்காரர்களை விட்டாலே அவர்களுடைய பெருமையைப் பேசுவதற்கே நேரம் சரியாகப் போய்விடும். *(சிரிப்பு)*

திரு. சிங்கை கோவிந்தராசு: அந்த நிறுவனங்களில் மெஷின்கள், கம்ப்யூட்டர்கள், எலக்ட்ரானிக் மைக்ரோ சிப்ஸ் போன்ற வெளிநாட்டவர் வியாபாரம் செய்கின்ற பொருள்களைத் தயாரிக்கிறார்கள். ஆகவே அதிகமாக வெளிநாட்டவர்கள் அந்த விமான நிலையத்திலே இறங்கி திருப்பூருக்கும் பெரியபாளையத்திற்கும் அதிக இடைவெளியுள்ள தொழிற்சாலைகளுக்குச் சென்று அந்தப் பொருட்களையெல்லாம் பார்வையிட்டு வியாபாரம் செய்து நமது தமிழகத்தின் பொருளாதாரத்தை அதிகமாக்கித் தருகின்ற வாய்ப்பை பெற்றிருக்கிறது. இதை ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு வாய்ப்புகள் கிடைக்கும்பொருட்டு, அந்த வர்த்தகப் பொருட்காட்சியை அங்கே அமைப்பது சிறப்பாக இருக்குமென்று கருதி, அதற்கு ஏற்கெனவே கொடீசியா நிறுவனமும் தனியாரும் அந்தப் பொருட்காட்சி அமைப்பதற்கு அரசிடம் நில ஆர்ஜிதம் செய்யக் கோரியிருக்கிறார்கள். ஆகவே அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 29]

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்த்தகப் பொருட்காட்சி அமைப்பது கொடீசியா என்கின்ற தொழிற்சங்கத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் கோவையில் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசிடம் இம்மாதிரியான எந்தக் குறிப்பும் தற்சமயம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தொழில் கேந்திரமான கோவையில் இந்த வர்த்தகப் பொருட்காட்சியை அமைப்பதன் மூலமாக வெளிநாட்டினுடைய பல்வேறு நவீன இயந்திரங்கள் அதிலே பங்குபெறுவதற்கும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஏற்கெனவே திருப்பூரில் தனியார் மூலமாக ஒரு பொருட்காட்சி நடத்தப்பட்டு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்திருக்கிறார்கள். அதன் மூலமாக தொழில் வளர்ச்சிக்கான நவீன இயந்திரங்களை வாங்குவதற்கும், அந்தப் பொருட்காட்சி இலாபத்தை ஈட்டித் தருகின்ற பொருட்காட்சியாக அமைந்திருக்கிறது. ஆகவே அதை நிரந்தரமாகவோ அல்லது ஆண்டுக்கு ஒரு முறையோ நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தப் பொருட்காட்சியை அமைப்பதன் மூலமாக தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கும், நவீன இயந்திரங்களை வாங்குவதற்கும் ஒரு வாய்ப்பை உருவாக்கும் முகத்தான் நிச்சயமாக அமையக்கூடும் என்கின்ற காரணத்தால் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அமைப்பதற்கு உண்டான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் வகையில் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான பொருட்காட்சிகளைப் பொறுத்தவரையில் அந்தச் சங்கங்கள்தான் இதுவரை செய்து வந்திருக்கிறார்கள். அரசு எந்தவிதமான பொருட்காட்சியையும் இதுவரை நடத்தவில்லை. ஆனால் உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 150, டாக்டர் க. கோபால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.